


இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.07.2024) திருச்சி, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 726 கிராம ஊராட்சிகளுக்கு 1048 கலைஞர் விளையாட்டு உபகரணங்களின் தொகுப்பை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, திருச்சிராப்பள்ளி மேயர் மு.அன்பழகன், நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், சீ.கதிரவன், மொ.பழனியாண்டி, செ.ஸ்டாலின்குமார், ந.தியாகராஜன், இனிகோ எஸ். இருதயராஜ், ப.அப்துல் சமது, க.சோ.க.கண்ணன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாதரெட்டி, திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பி. ரத்தினசாமி, பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கிரேஸ் லால்ரிண்டிக்கி, சிறப்பு திட்டச் செயலாக்கத்துறை அரசு செயலாளர் மருத்துவர். தாரேஸ் அஹமத், செஸ் வீராங்கனை ஷர்வானிக்கா, பாரா தடகள வீரர் ராஜேஷ், ஆகியோர் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.07.2024) திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற அரசு விழாவில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, திருச்சிராப்பள்ளி மேயர் மு. அன்பழகன், நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், சீ.கதிரவன், மொ. பழனியாண்டி, செ.ஸ்டாலின்குமார், ந.தியாகராஜன், இனிகோ எஸ்.இருதயராஜ், ப.அப்துல் சமது, க.சோ.க.கண்ணன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பி.ரத்தினசாமி, பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கிரேஸ் லால்ரிண்டிக்கி சிறப்பு திட்டச் செயலாக்கத்துறை அரசு செயலாளர் மருத்துவர். தாரேஸ் அஹமத், செஸ் வீராங்கனை ஷர்வானிக்கா, பாரா தடகள வீரர் ராஜேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விளையாட்டுத்துறை வளர்ச்சி என்பது

# நகரங்களில் மட்டுமின்றி கிராமங்களையும் சென்றடைய வேண்டும்!

## திருச்சி அரசு விழாவில் நலத்திட்ட உதவிகளை வழங்கி – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**திருச்சி, ஆக.2-**

**“விளையாட்டுத்துறை வளர்ச்சி என்பது நகரங்களில் மட்டுமின்றி கிராமங்களையும் சென்றடைய வேண்டும்” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருச்சியில் நடைபெற்ற அரசு விழாவில் உரையாற்றும் போது வேண்டுகோள் விடுத்தார்.**

**திருச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பல்வேறு அரசு நலத்திட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

**முதலமைச்சர் அவர்களின் கனவுத்திட்டமான நான் முதல்வன் திட்டத்தின் மூலம், வேலை வாய்ப்பைப் பெற்றுள்ள 4,840 இளைஞர்களுக்கு பணி நியமன கடிதங்களை வழங்கி வாழ்த்தினார். மூன்று மாவட்டங்களுக்கும் சேர்த்து கிட்டத்தட்ட 33 வகையான விளையாட்டு உபகரணங்களைக் கொண்ட 1,048 கிட்ஸ்களையும் வழங்கினார்.**

**இதைத் தொடர்ந்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சி உரை வருமாறு:**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, திருச்சி, அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் உள்ள 726 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

### அரசு நலத்திட்ட உதவிகள்

திருச்சி மாவட்டத்தில், `நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பை பெறும் 4 ஆயிரத்து 840 பேருக்குப் பணி நியமன கடிதங்களை இங்கு வழங்க இருக்கிறோம். நகராட்சி நிர்வாகத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, பள்ளிக் கல்வித்துறை, சுகாதாரத்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பாக, சுமார் 30 ஆயிரம் பயனாளிகளுக்கு ரூபாய் 152 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளையும் இந்த மேடையில் வழங்க இருக்கிறோம். அது மட்டுமல்ல, 221 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய மற்றும் முடிவுற்ற 7 ஆயிரத்து 950 பணிகளை இன்று தொடங்கி வைக்கிறோம்.

`திருச்சி என்றாலே திருப்புமுனை’ என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். அப்படிப்பட்ட திருச்சிக்கு வருகை தந்து உங்களையெல்லாம் இந்த நிகழ்ச்சியின் வாயிலாகச் சந்திப்பதைப் பெருமையாக நினைக்கிறேன்.

### மூன்று மாவட்டங்கள்

இங்கு நடைப்பெற்றுக் கொண்டிருக்கிற நிகழ்ச்சி, மூன்று நிகழ்ச்சிகளாக நடந்திருக்க வேண்டும். எனினும், காலத்தின் அருமை கருதி, ஒரே நிகழ்ச்சியாக நடத்தப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்குச் சீரோடும் சிறப்போடும் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ள மாவட்ட நிர்வாகத்திற்கு எனது பாராட்டுக்களையும் நன்றியையும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான நம் திராவிட மாடல் அரசு, உங்களுக்கு ஒவ்வொரு நாளும் பல்வேறு நலத்திட்டங்களைத் தந்து கொண்டிருக்கிறது. நம் அரசின் சாதனைகளை, நலத்திட்டங்களை அங்கீகரிக்கும் விதமாக நடைபெற்று முடிந்த மக்களவைத் தேர்தலில் 40க்கு 40 தொகுதிகளிலும் நம் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான அணியை நீங்கள் மாபெரும் வெற்றி பெற வைத்தீர்கள். அதற்கும் இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டம்’

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 12 ஆயிரத்து 525 கிராம ஊராட்சிகளுக்கு ரூபாய் 86 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்களைக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்ற அடிப்படையில், தொடங்கப்பட்ட திட்டம்தான் `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டம்’. இதை முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டில் மதுரை மாநகரில் தொடங்கி வைத்தோம். ஏற்கெனவே ஆறு மாவட்டங்களில் அனைத்து ஊராட்சிகளுக்கும் இது கொடுக்கப்பட்டிருக்கிறது.

இன்று திருச்சி மாவட்டத்தில் உள்ள 404 கிராம ஊராட்சிகளுக்கும், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 121 கிராம ஊராட்சிகளுக்கும், அரியலூர் மாவட்டத்தில் உள்ள 202 கிராம ஊராட்சிகளுக்கும் `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டத்தை இன்று வழங்க இருக்கிறோம். இந்த மூன்று மாவட்டங்களுக்கும் சேர்த்து கிட்டத்தட்ட 33 வகையான விளையாட்டு உபகரணங்களைக் கொண்ட 1,048 கிட்ஸ்கள் இன்று வழங்கப்பட இருக்கிறது.



### தடகள வீரர் ராஜேஷ்

இன்றைக்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் உலகெங்கும் பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகிறார்கள். குறிப்பாக திருச்சி, அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களிலிருந்து ஏராளமான விளையாட்டு வீரர்களை தமிழ்நாடு பெற்றிருக்கிறது. அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுதான் தடகள வீரர் தம்பி ராஜேஷ் அவர்கள்.

திருச்சியைச் சேர்ந்த ராஜேஷ் எஸ்.டி.ஏ.டி விளையாட்டு விடுதியில் பயின்றவர் என்பது எங்களுக்குக் கூடுதல் பெருமை. சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்களைக் குவித்து, தமிழ்நாட்டிற்கும் இந்திய ஒன்றியத்திற்கும் பெருமையைச் சேர்த்தவர்தான் தம்பி ராஜேஷ்.

குறிப்பாக, சென்ற ஆண்டு விபத்து ஒன்றில் தன் கால்களை இழந்த போதிலும், அவரின் தளராத முயற்சியாலும் தன்னம்பிக்கையாலும் இன்று `பாரா ஸ்போர்ட்ஸ்’ களத்தில் பல சாதனைகளைப் படைத்து வருகிறார். அவருக்கு நம் அனைவரின் சார்பாக வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வோம்.

இங்கு வருகை தந்துள்ள அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சகோதரி சர்வானிகா அவர்கள் செஸ் போட்டியில் பல்வேறு சாதனைகளை உயரங்களைத் தொட்டு வருகிறார். குறிப்பாக ‘அண்டர் 7’, ‘அண்டர் 8’, ‘அண்டர் 10’ போட்டிகளில் தங்கம், வெள்ளி எனப் பல பதக்கங்களைக் குவித்து வருகிறார். ‘ஓபன் செஸ் ஃபெஸ்டிவல்2024’, ‘செர்பியா பிரேஸ்டீஜ் 2024’ உள்ளிட்ட சர்வதேசப் போட்டிகள், ஆசிய அளவிலான போட்டிகள் என, தான் பங்கேற்கும் அனைத்துப் போட்டிகளிலும் சாதனைகளைக் குவித்து வரும் தங்கை சர்வானிகாவுக்கு நாம் அனைவரும் நம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

### விளையாட்டுத்துறை வளர்ச்சி

தம்பி ராஜேஷ், தங்கை சர்வானிகா ஆகியோர் இந்தப் பகுதியில் இருந்து இன்னும் பல நூறு விளையாட்டு வீரர்கள் உருவாக உந்து சக்தியாக, எடுத்துக்காட்டாக திகழ்கின்றனர் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது.

விளையாட்டுத்துறை வளர்ச்சி என்பது நகரங்களில் மட்டும் தேங்கி விடக்கூடாது, கிராமங்களுக்கும் அது சென்றடைய வேண்டும். கிராமங்களிலிருந்து நிறைய விளையாட்டு வீரர்கள் வரவேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்த ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டத்தை நாங்கள் தொடங்கி வைத்தோம்.

இந்த விளையாட்டு உபகரணங்களைப் பயன்படுத்தி, கிராமங்களில் இருக்கக்கூடிய இளைஞர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்தோடும், புத்துணர்ச்சியுடனும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விளையாட்டுத் துறையின் சார்பாக முதன்முறையாக கலைஞர் அவர்களின் பெயரால் ஒரு திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்றால், அது `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டம்தான். இந்த விளையாட்டு உபகரணங்களைப் பெறக்கூடிய இளைஞர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு இருந்த அந்தத் திறமைகளை, குணங்களை நீங்களும் பெற வேண்டும் என்ற முறையில்தான் இந்தத் திட்டத்தை வகுத்திருக்கிறோம். விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு இன்றைக்கு ஏராளமான சாதனைகளைப் படைத்து வருகிறது.

### பாரிஸ் ஒலிம்பிக் போட்டி

இன்றைக்கு தமிழ்நாட்டிலிருந்து 16 வீரர்கள் பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கின்றனர். அவர்களுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் தமது கைகளால் ஊக்கத்தொகையாக ஏழு லட்சம் ரூபாய் உள்ளிட்டு மொத்தம் ஒரு கோடியே 12 லட்சம் ரூபாயை பாரிஸ் ஒலிம்பிக்கில் விளையாடச் சென்றுள்ள தமிழ்நாட்டு வீரர்களுக்கு வழங்கி இருக்கிறார்கள்.

விளையாட்டு வீரர்களுக்குப் பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்ற அடிப்படையில், தொடங்கப்பட்டதுதான் ‘தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேஷன்’. இந்த நாள் வரை இதன் மூலம் 10 கோடி ரூபாய் அளவிற்கு நம் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு நிதி உதவி அளித்துள்ளோம். இதன் காரணமாக, தமிழ்நாட்டு வீரர்கள் பல்வேறு சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்று பல பதக்கங்களைக் குவித்து வருகிறார்கள்.

இப்படிப் பதக்கங்களை வென்ற 600 வீரர்களுக்கு ரூபாய் 14 கோடியை உயரிய ஊக்கத்தொகையாக நேற்று வழங்கினோம் என்பதை இந்த நிகழ்ச்சியின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு அரசு படைத்து வரும் சாதனைகளைப் பாராட்டி, `தி இந்து ஸ்போர்ட்ஸ் ஸ்டார்’ பத்திரிக்கை சார்பாக, `தி பெஸ்ட் ஸ்டேட் ஃபார் ப்ரோமோஷன் ஆஃப் ஸ்போர்ட்ஸ்’ எனும் விருது, சி.ஐ.ஏ ‘ஸ்போர்ட்ஸ் பிசினஸ் அவார்டு’ நிகழ்வில் `தி பெஸ்ட் ஸ்டேட் ப்ரோமோட்டிங் ஸ்போர்ட்ஸ்’ என்ற உயரிய விருது ஆகியவை நம் தமிழ்நாடு அரசு விளையாட்டுத் துறைக்கு வழங்கப்பட்டன.

### சாதனைப் பயணங்கள்

எனவே, இந்த சாதனைப் பயணங்கள் தொடர, இளைஞர்களின் பங்களிப்பு மிகமிக அவசியம். அதுவும் கிராமப்புற இளைஞர்களின் பங்களிப்பு மிகமிக முக்கியமானது. அதற்காகத்தான் இன்று `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டத்தை வழங்கி, செயல்படுத்தி இருக்கிறோம். எனவே, ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டத்தின் கீழ் விளையாட்டு உபகரணங்களைப் பெற்றுள்ள திருச்சி, பெரம்பலூர், அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த கிராம ஊராட்சிகளுக்கும் அவற்றைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் `நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற 4 ஆயிரத்து 840 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பிற்கான பணி நியமனக் கடிதங்களை வழங்குகிறோம். இதன் அடையாளமாக 250 இளைஞர்களுக்கு இந்த மேடையில் பணி நியமனக் கடிதங்களை வழங்க இருக்கிறோம். இதன் மூலம் பாலிடெக்னிக், கலை அறிவியல் மற்றும் பொறியியல் படித்த இளைஞர்கள் ஆண்டுக்கு 1 லட்சத்து 62 ஆயிரம் முதல் 8 லட்சம் ரூபாய் வரையிலான ஊதியத்தில், பணிக்குச் சேர உள்ளார்கள். அவர்களுக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டம்தான் `நான் முதல்வன் திட்டம்’. இன்றைக்கு அந்தத் திட்டம் பல லட்சம் இளைஞர்களின் வாழ்வில் ஒளி ஏற்றி வைத்திருக்கிறது. அதற்கு ஒரு சிறிய உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். திருச்சி திருவெறும்பூரைச் சேர்ந்த சகோதரர் அபினேஷ் இளம் வயதிலேயே தந்தையை இழந்தவர். அபினேஷ் தன் தாத்தா பாட்டியின் அயராத உழைப்பினால் பள்ளிப்படிப்பை நிறைவு செய்து துவாக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் டிப்ளமோ இன் சிவில் இன்ஜினீயரிங் படித்தார். இரண்டாம் ஆண்டு படிக்கும் போது ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் திறன் பயிற்சிகளைப் பெற்ற தம்பி அபினேஷ், தற்போது ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 5 லட்சம் ஊதியத்தில் மெக்டர்மார்ட் இன்ஜினியரிங் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்துள்ளார். அபினேசின் வாழ்வில் இருந்த தலைமுறை இருட்டை ‘நான் முதல்வன்’ திட்டம் போக்கியுள்ளது என்பதை, இங்கு பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

### பணி நியமனக் கடிதங்கள்

‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் திருச்சி மாவட்டத்தில் மட்டும் 4 ஆயிரத்து 840 மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் இதுவரை 31 லட்சம் மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர் என்பதை, இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற ஆண்டு கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 20 ஆயிரம் மாணவர்கள் வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ள நிலையில், இந்த ஆண்டு நடைபெற்ற ‘நான் முதல்வன்’ வேலை வாய்ப்பு முகாமின் மூலம் ஆறு மாத காலத்தில் மட்டுமே ஒரு லட்சத்து 3 ஆயிரம் இளைஞர்கள் பணி வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள்.

இந்த ஆண்டு இறுதிக்குள் இன்னும் அதிகமான மாணவர்கள் வேலை வாய்ப்பைப் பெற உள்ளனர். எனவே, இங்கு பணி நியமனக் கடிதங்களைப் பெற்றுள்ள உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுடைய புதிய பணி சிறக்கட்டும்.

‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் பணி வாய்ப்பைப் பெற்றுள்ள நீங்கள் அனைவரும் நாளை நான்கு பேருக்கு நீங்கள் பணி வாய்ப்பினைக் கொடுக்க வேண்டிய நிலைக்கு உயர வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கம். அதற்கு, நம் அரசு உங்களுக்கு எப்போதும் பக்க பலமாகவும், உற்றத் துணையாகவும் உடன் நிற்கும் என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் அரசுத் தரப்பில் `கலைஞர் கனவு இல்லம்’ உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்ந்த ஏராளமான திட்டங்களைப் பயனாளிகளின் கைகளுக்குக் கொண்டு சேர்த்திருக்கிறோம். நம் முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரசின் சேவைகள் சென்றடைய வேண்டும்.

ஒவ்வொரு தனிநபரும் நம் திராவிட மாடல் அரசால் பயன்பட வேண்டும் என்றுதான் செயல்பட்டு வருகிறார்கள். அதன் வெளிப்பாடாகத்தான் மகளிருக்குக் கட்டணமில்லா ‘விடியல் பயணம் திட்டம்’, மாணவியருக்கு ‘புதுமைப்பெண் திட்டம்’, மாணவர்களுக்கு ‘தமிழ்ப் புதல்வன் திட்டம்’, ‘முதலமைச்சரின் காலை உணவு திட்டம்’, ‘மக்களை தேடி மருத்துவம்’, ‘நம்மை காக்கும் 48 திட்டம்’, ‘இல்லம் தேடி கல்வித் திட்டம்’, ‘மக்களுடன் முதல்வர்’ போன்ற எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பான திட்டம் என்றால் அது நம் முதலமைச்சர் அவர்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ள ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ தான். கடந்த செப்டம்பர் மாதம் முதல் இந்த ஜூலை மாதம் வரை 1 கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் ஒன்றிற்கு தலா ஆயிரம் ரூபாய் என்கிற வகையில், மொத்தம் இதுவரை 11 ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் மூலம் ஒவ்வொரு மகளிருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இப்படி அனைத்துத் தரப்பு மக்களுக்குமான திட்டங்களை நம் அரசு வழங்கி வருகிறது.

### இந்தியாவிலேயே நம்பர் ஒன்

இந்தத் திட்டங்களின் காரணத்தால்தான் தமிழ்நாடு அரசு இன்றைக்கு வறுமை ஒழிப்பு, மகளிர் முன்னேற்றம், தரமான கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட 13 துறைகளில் இந்தியாவிலேயே நம்பர் ஒன் இடத்தில் இருந்து வருகிறது.

இதற்கு ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பு புள்ளிவிவரத்துடன் சொல்கிறது. இனியும் தொடர்ந்து உங்களுக்காக உழைக்க இந்த அரசும் நம் முதலமைச்சரும் நாங்களும் தயாராக இருக்கிறோம். எனவே, இந்தத் திட்டங்களின் பயனாளிகள் என்று இல்லாமல், அவற்றின் பங்கேற்பாளர்கள் என்ற உணர்வோடு நீங்கள் எல்லாம் செயல்பட வேண்டும்.

கழக அரசின் திட்டங்களை உங்களுடைய உறவினர்கள், நண்பர்கள் என அனைவரிடமும் எடுத்துச் செல்லுங்கள். நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களுக்கு `பிராண்ட் அம்பாசிடர்ஸ்’ இங்கு வந்திருக்கக்கூடிய பயனாளிகளாகிய நீங்கள்தான்.

இங்கு வருகை தந்து நலத்திட்ட உதவிகள், கலைஞர் விளையாட்டு உபகரணங்கள், நான் முதல்வன் பணி ஆணைகளைப் பெற்றுள்ள உங்கள் அத்தனைப் பேருக்கும் மீண்டும் எனது அன்பையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என். நேரு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தரபாண்டியன், காடுவெட்டி தியாகராஜன், பழனியாண்டி, ஸ்டாலின் குமார், கதிரவன், இனிகோ இருதயராஜ், அப்துல் சமது, கா.சா.கோ.கண்ணன், மேயர் அன்பழகன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ராஜேந்திரன், துணை மேயர் திவ்யா தனக்கோடி, தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர்.அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் செயலாளர் டேரேஸ் அகமது, தடகள வீரர் ராஜேஷ், செஸ் வீராங்கனை சர்வானிகா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் துணைச்செயலாளர் பிரதாப், மாவட்ட ஆட்சியாளர்கள் பிரதீப்குமார், ரத்தினசாமி, கிரேஸ் பாச்சாவு, திருச்சி மாநகர ஆணையர் சரவணன் ஐ.ஏ.எஸ், பயிற்சி உதவி ஆட்சியர் அமித் குப்தா, உட்பட உள்ளாட்சிப்பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.